நேரு குழந்தைகள் புத்தகாலயம்

குட்டிச் சூரியன்

ஜஸ்வந்த் சிங் பிர்தி

தமிழாக்கம் :
டி. மதன் ராஜ்

சித்திரங்கள் :
ரத்னாகர் சிங்



nbt.india
एकः सूते सकलम्

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

“இங்கே பாருங்களேன்... எவ்வளவு அழகான பூ!”
“எங்கே...?”
“இந்தப் பக்கம் வந்து பாருங்க.”
“எந்தப் பக்கம்?”
“பூக்களின் பக்கம்.”
எல்லாக் குழந்தைகளும் பூக்களின்
பக்கம் சென்றார்கள்.









அது குளிர்காலத்தின் ஒரு காலைப்பொழுது. குழந்தைகள் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். சூரியன் மெதுவாக மேலெழுந்து கொண்டிருந்தான். சூரிய ஒளி எங்கும் பரவிக் கொண்டிருந்தது.

அங்கங்கே பனித்துளிகளைப் பார்க்க
முடிந்தது. பனித்துளிகளின் ஊடாக
சூரிய ஒளி பட்டுத் தெறித்தது.





“வாவ்!”

“என்னது! என்னது!”

“சூரியன்!”

“எங்கே? எங்கே?”



“பனித்துளிகளில் சூரியன்!”
“என்ன...? பனித்துளியிலா?!”
“அதெப்படி? இருக்காது!”
“பூக்களில் சூரியன்!”
“நிஜமாவா? நம்பவே முடியலே!”





குழந்தைகள் எல்லாரும் பனித்துளிகள் படிந்திருந்த பூக்களைக் குனிந்து பார்த்தார்கள். துளிகளில் அவர்களின் முகம் பிரதிபலித்தது.

“ஜஜஜ! நம்ம முகம் தெரியுது!”







“நாமும் சூரியன் மாதிரி ஆகிட்டோமா?”
அப்போது காற்று வேகமாக வீசியது. பூக்களில்
இருந்த பனித்துளிகள் சிதறி விழுந்தன.

“அட....! நாமெல்லாம் காணாமப் போயிட்டோம்!”
“பூக்களில் இருந்த சூரியனும் காணாமப் போயிடுச்சு!”
“ஆனா நாமெல்லாம் உயிரோட இருக்கோமே!”



“நாம மட்டுமா? சூரியனும்தான் வானத்தில் மின்னுது.”
“எல்லாப் பக்கமும் குட்டிக் குட்டிச் சூரியன்களா மின்னிகிட்டு இருந்தது எவ்வளவு அழகா இருந்துச்சு இல்லையா?”
“ஆமா.....! ஒவ்வொரு துளியிலும் ஒரு சூரியன்!”



"பூக்கள் எப்பவும் ஏன் சிரிச்சுட்டே இருக்குன்னு இப்போ எனக்குத் தெரிஞ்சு போச்சு. பூக்களின் மடி நிறைய சூரிய ஒளி!"

"குழந்தைகளே... நீங்களும் சிரிச்சுட்டேதான் இருக்கீங்க. ஏன்னா, உங்க மனசுக்குள்ளேயும் நிறைய ஒளி இருக்கு!" அழகாய் பதில் சொன்னது ஒரு பூ.

